# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,723 — JUNE 25, 1915.


## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Katarагama Festival.]

### கதிர்காம திருவிழா.

இத்தால் விளம்பரப்படுத்துவது என்னவெனில், 1896 ம் ஆண்டு 13 ம் கட்டளைச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளின் 12 ம் விதிப்பிரகாரம் யார் ஆகிலும் தங்கள் டிஸ்திரிக்கிலிருக்கும் ஏசண்டு அல்லது உதவி ஏசண்டுத்துரை அவர்களிடம் உத்தரவுப்பத்திரம் பெறாது கதிர்காமத்திலிருக்கும் தருணமோ தேவாலயத்துக்கு எசல என்றும் இல்மாகாச்சி என்றும் திருவிழா நாட்களில போயில் அவர்கள் மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் ரூபா 1,000 குற்றங்கொடுக்க அல்லது ஒரு வருஷ கடின அல்லது கடினமில்லாத ஊழியம் செய்ய ஏதுவாய் இருக்கும்.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1915 ம் ஷு ஜூன் மீ 19 ந் உ.

ஜெ. எ. ஸ்றப்ஸ்,
இராசாங்க லிகிதர்.

---

[Rules for the Kataragama Pilgrimage, 1915.]

### எச்சரிக்கைகளாவன.

1. சுகாதாரணையைக் குறித்து கதிர்காம திருவிளாக்காலத்தில் யாத்திரிகள் கதிர்காமத்தில் தங்கக்கூடிய தவணை 16 நாள். அதாவது: 1915 ம் ஆண்டு ஆடி மீ 12 ந் தேதி தொடக்கம் 27 ந் திகதி வரைக்குந்தான் இதனால் நியமிக்கப்பட்டன. மேற்சொன்ன தேதிக்குமுன் போகப்பட்டவர்களும் சொல்லப்பட்ட தேதிக்குப்பின் தங்கப்பட்ட யாத்திரிகளெவரும் அனியாயகாரரென்று காணப்படும்.

2. நோயால், அல்லது மெலிவினால், அல்லது பலவீனத்தினால், அல்லது முதிர்ந்த வயதினால், அல்லது இள பராயத்தினால், அல்லது தீன் சாமான்கள் குறைவினால், அல்லது வேறு போதுமான காரணத்தினால், அல்லது பயணம்போகக்கூடாதவனென்டல்லது, நோயினால் இன்னொருவனுடைய சுகத்துக்கு பழுதுண்டாக்குமென்று காணப்பட்ட யாத்திரிகளைப் பொலிசு மீதவான் அல்லது பொலிசு அதிகாரமுடையவருக்கு பயணத்தில் எவ்விடத்திலானாலும் அப்படிப்பட்ட யாத்திரிகளைக் கதிர்காமம்போகவிடாமல் தடுக்கத் தத்துவமுண்டு. மேற்சொல்லப்பட்ட யாத்திரிகளுக்குப்பண்ணும் கட்டளைகளுக்கு அமையும்படி பிணை எடுக்கும்படியும் அதிகாரமுண்டு. அவ்விதம் பிணைகொடுக்கக்கூடாத பேர்களை மூன்று நாளைக்கு மேற்படாத மறியலில் வைத்துக்கொள்ளப் பொலிஸ் மீதவானல்லது பொலிஸ் அதிகாரமுள்ளவருக்குத் தத்துவமுண்டு.

3. கதிர்காமத்தில் திருவிளா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி (பேதி) உண்டுபடின் சுகாதாரணைத் தலைமைக்காரனுக்கு திருவிளாவை நிறுத்தவும் யாத்திரிகளெல்லாரையும் தங்களிடம்போய்ச்சேரவும் இன்ன பாதையால் போகவேண்டுமென்றும் கட்டளையிடத் தத்துவமுண்டு.

4. சுகாதாரணைக்காக நியமனம்பண்ணப்பட்டிருக்கும் தலைமைக்காரருக்கு கதிர்காமத்திலும் திரும்பிச்செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச் செய்யவும் செய்விக்கவு மதிகாரமுண்டு :—

   (a) யாத்திரிகளுக்குச் சீலை துவைக்கவும், முளுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும் மலபாதைக்குப் போகவும் வேறுவேறு தலங்களை நியமிக்கவும்;
   (b) அந்தந்தச் சாதியார் தங்கியிருக்கும்படி வேறே வேறே தலங்களை நியமிக்கவும்;
   (c) யாத்திரிகள் கூட்டமாக இன்னபாதையால் செல்லவேணுமென்றும்;
   (d) யாத்திரிகளுக்குக் கொடுக்கப்பட்ட தீனைப் பகிர்ந்துகொடுத்தலைப்பற்றிப் பார்த்து நியமிக்கவும் நோயுண்டாக்கப்பட்ட யாத்திரிகளுக்குத் தங்கியிருக்கும்படி வேறே தலத்தை வேறாக்கிவைக்கவும் ஆள்களுடன் வேறொருவரையும் பேசாமலிருக்கும்படிபண்ணவும் அவர்களுக்குப் பயணம்போகக் கூடாதுபோனால் நிறுத்திவைக்கவும். இவ்விதம் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிபண்ணும் கட்டளையை மீறப்பட்டவர்கள் குற்றஞ்செய்யப்பட்டவர்களாக ஏர்க்கப்படும்.

5. பயணத் தல்லது தங்கியிருக்கு மிடத்தில் சுகாதாரணை அதிகாரியல்லது அப்பேர்ப்பட்ட அதிகாரியில்லாத விடத்தில் பொலீஸ் தலைமைக்காரர் சுகத்துக்குப் பழுதாகுமென்று காணப்பட்டால், தீன்சாமானெல்லாத்தையும் பறித்து நாசமாக்கிப்போடவும் பொலீஸ் தத்துவமுடைய பேர்கள் கட்டுப்பட்டிருக்கிறதல்லாமலும், அவ்விதஞ் செய்யவிடாமல் தடைபண்ணப்பட்ட பேர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள்.

6. ஆராகுதல் மாடுகள் வண்டில்மாடுகள் குடியிருக்கும் இடத்தின் 3 கட்டைக்குட்பட கொண்டுவரப்படாது. அப்படிக் கொண்டுவந்தால் குற்றவாளிகளாவார்கள்.

7. கதிர்காமத்தில் தங்கியிருக்குமிடத்தில் திருவிளாத்தலைமை நியமிக்கு மிடத்தைவிட வேறிடத்தி லிறைச்சி விற்கப்பட்டவர்கள் அல்லது சுகாதாரணைத்தலைமை அல்லது பொலீஸ் தலைமை அவர்களால் கெட்ட தீனென்று விலக்கப்பட்ட சாமான் விற்கப்பட்டா லவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

8. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கு மிடத்தைவிட வேறே தலத்தில் மலங்கழிக்கச் சம்பவித்தால், அல்லது மலத்தை மண்ணினால் மூடாவிட்டால், அல்லது தலைமைக்காரர் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றுக்கிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தா லப்படிச் செய்தவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்படுவார்கள்.

9. தொற்றுவியாதியால் பீடிக்கப்பட்டவன் சுகாதாரணை அதிகாரிக்கு அல்லது அவரில்லாவிட்டால் பிரதான பொலிஸ் தலைமைக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறினாலல்லது வந்த நோயாளியை ஒளித்துவைக்க அல்லது அதற்கு உதவிசெய்பவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

10. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் வைத்துப் பொலிஸ் தலைமை நியமிக்கு மிடத்தில் விடுதி நிற்குதல்லாமல், அப்படிச் செய்யக்கூடாதென்று மறுப்பவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

11. 1915 ம் ஆண்டுக்கு யாத்திரிகள் 1,750 பேர்கள் போகும்படி நியமிக்கப்பட்டது.

12. கதிர்காமத்துக்கு 1915 ம் ஆண்டு போகப்படவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பகுதி ஏஜண்டரிடம் உத்தரவுச்சீட்டு பத்திரம் பெற்றுக் கொண்டுபோகவேண்டும்.

13. எப்பேர்ப்பட்ட பொலிஸ் தலைமை அல்லது கதிர்காம யாத்திரையைப்பற்றி ஏர்ப்பட்டிருக்கும் எந்த உத்தியோகஸ்தனும் கேட்டபோது உத்தரவுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

14. உத்தரவுச்சீட்டில் சொல்லப்பட்ட பேரையுடையவரைத்தவிர வேறேயொருவரும் அதை உபயோகிக்கப்படாது.

[By-laws made by the Local Board of Badulla.]

இத்தால் அறிவிப்பது என்னவானால் 1898 ம் ஆண்டின் லோக்கல் போட் சட்டத்தின் 56 ம் 57 பிரிவுகளின் பிரகாரம் வதுளை லோக்கல் போட் சங்கத்தாரால் செய்யப்பட்ட பின்வரும் உப விதிகள் தேசாதிபதியவர்களின் அதிகாரமந்திர சபையாரது ஆலோசனைப்படிக்கும் நடத்தும் அத்தேசாதிபதியவர்களால் பெலப்படுத்தப்பட்டு எல்லாரும் அறியும்படி இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதாம்.

உத்தமனுர் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1915 ம் ஹு ஆனிமீ 21 ந உ.

———

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கலோனியல் சக்கிடுத்தார்.

சீர்படுத்துஞ் சபையில் சகல பாற் கூடங்களினதும், பால்விற்பவரினதும் பேர்வழி இடாப்பொன்றிருக்கவேண்டும்.

1. சபை எல்லைக்குட்படக் குடியிருக்கு மெவனுக்கல்ல தெவருக்காவது பாலுதவும் அல்லது விற்கும் எல்லவருடைய நாமமும் அவர்கள் குடியிருப்பும் மேற்படியவர்கள் காலத்துக்குக் காலம் பால் எடுக்க பால் வைக்க அல்லது பால் பகிர்ந்து கொடுப்பதற்காகப் பாவிக்கிற பாற்கிடங்குகளினதும் பாற்கூடங்களினதும் பெயர்களைக் குறித்த வோரிடாப்பு மேற்படி சபையில் வைத்திருக்க வேண்டும்.

அயோக்கியரான சகலருடைய நாமங்களும் இடாப்பிலிருந் தெடுக்கப்படும்.

2. பால் கறப்பு அல்லது விற்பனை விட்டுவிடுகிற எல்லவருடைய நாமங்களும் பால் கறப்பு விற்பனை என்றும் தொழிலை நடத்தும்படி குறிக்கப்படும் திட்டங்களின்படி நடவாததால், அதற்கயோக்கியராகுஞ் சகலருடைய நாமங்களும் மேற்படி இடாப்பிலிருந் தெடுத்துப்போடப்படும்.

பாற்கூடங்கள் பரிசோதிக்கப்படும்.

3. இப்படியே எழுதிப் பதிக்கப்பட்ட பாற்கூடங்களும், பாற்கிடங்குகளும், அவ்விடங்களில் பால் கறப்பு பகிர்ந்து கொடுத்தலாகிய தொழிலில் உபயோகப்படும் மாடு, உபகரனம், எத்தனமாகிய இவையெல்லாம் மேற்படி சபையால் பரிசோதிக்கப்படும்.

பாற்கூடங்களுக்கும் பாற்கிடங்குகளுக்கும் உப ஏசன்றுதுரையவர்கள் பிரவேசிக்கக்கூடும் தத்துவம்.

4. வேண்டிய சமயங்களில் யாதாமொன்றைப் பரிசோதிப்பதற்காக ஏஜன்றுதுரையவர்கள் எந்தப் பாற்கூடத்துக்கல்லது பாற்கிடங்குக்காவது அல்லதவை இருக்கும் இடங்களுக்காவது தானே உட்பிரவேசிக்க அல்லது மறுபேர் உட்பிரவேசிக்க உத்தரவளிக்கவும் அல்லது அவ்விடங்களிலுள்ள பாலில் அல்லது அவ்விடங்களிலுள்ள நீர்நிலையின் தண்ணீரில் கொஞ்சம் பரீட்சைபண்ண, மாதிரிக்காக மாத்திரம் கொண்டுபோகவும் அல்லது கொண்டுபோகும்படி தத்துவம் கொடுக்கவும் அதிகாரமுண்டு:

பாற்கூடக்காரர் தங்கள் கூடங்களைச் சௌக்கியத்துக்குரிய விதமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

5. பாற்கூடக்காரர் பால்விற்பனைக்காரராகிய இவர்களிடம் தங்கள் கூடங்களும், அல்லது கிடங்குகளும், மற்றுமவற்றிலுள்ள தட்டுமுட்டு தளவாடங்களும் துப்புரவாகவும் சௌக்கியத்துக் கேதுவாயும் வைத்துக்கொள்ளும்பொருட்டு, ஓர் எழுதப்பட்ட அறிக்கையைக்கொண்டு ஏஜன்றுதுரையவர்களால் கேள்க்கப்படும் சொல்லப்பட்ட அறிவித்தலின் ஏவல்படி நடக்காத எந்தப்பால் கூடக்காரர் பால்விற்பனைக்காறர்களாகியவர்கள் 1898 ம் லோக்கள் போட் சட்டத்தின் 107 ம் பிரிவின் பிரகாரம் ஓர் குற்றம் செய்வார்கள் என்பது. தண்ணீர் கெட்டுப்போகுந் தருணங்களில் பாற்கூடக்காரர் தங்கள் கிணறு முதலியவையை மூடிப்போடவேண்டும்.

6. யாதாயினுமோர் பாற்கூடத்தில், அல்லது பாற்கிடங்கில், அல்லது அவை அடுத்த யாதாயினுமோர் கிணற்றில், அல்லது நீர்நிலையத்திலுள்ள தண்ணீர் மேற்படி தொழிலுக்காவது அல்லது மனிதர் பாவிப்புக்காவது எடுக்கக் கூடாதவிதமாக அசுத்தமாயும் அசடாயுமிருக்கில், அப்பேர்ப்பட்ட கிணறு முதலியவையை மூடிபோடும்படியாவது, அல்லது அவைகளின் தண்ணீர் ஏஜன்றுதுரையவர்கள் கட்டளை இடுங்காலம் வரைக்கும் மேற்படி தொழிலுக்கு உபயோகிக்காதிருக்கும்படியாவது, அல்லது அப்பேர்ப்பட்ட ஊற்றுக்கள் எப்போதைக்கு மூடப்பட்டிருப்பதே அவசியமென்று மேற்படி துரையவர்கள் எண்ணுவாராகில், அவை எப்போதைக்கும் மூடப்பட்டிருக்கும் பொருட்டும், பாற்கூடக்காரரிடத்திலும் பால்விற்பனைக்காரரிடத்திலும் எழுதப்பட்ட வோர் அறிவிப்பால் கேள்க்கப்படும், சொல்லப்பட்ட அறிவித்தலின் ஏவல்படி நடக்காத எந்தப் பால்கூடக்காரர் பால்விற்பனைகாறர்களாகியவர்கள் 1898 ம் லோக்கள்போட் சட்டத்தின் 107 ம் பிரிவின் பிரகாரம் ஓர் குற்றம் செய்வார்கள் என்பது.

பாற்கூடக்காரர் முதலானோர் பேர் பதியக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

7 A. சபை எல்லைக்குட்படக் குடியிருக்கும் மெவனுக்கல்லது எவருக்காவது பாலுதவ அல்லது விற்க ஏற்பட்டிருக்கிற, அல்லது ஏற்படப்போகிற எந்தப் பாற்கூடக்காரனும், அல்லது பால் விற்போனும் தன் பேர்வளியும், தன் குடியிருப்பும், பாற்கூடத்துக்காக அல்லது பாற்கிடங்குக்காகப் பாவிக்கிற அல்லது பாவிக்கப்போகிற பாற்கூடங்களும் பாற்கிடங்குகளுமுள்ள விடங்களும்; ஒவ்வொன்றுகக் குறித்து எழுதிப் பதிவுசெய்ய சீர்படுத்தலின் சபையிடத்துக் கேட்டுக்கொள்ள வேண்டுவதுந்தவிர, அது முதலாக குடியிருப்பு மாற்றும்போதும் அல்லது மேற்குறித்த பாற்கூடம் பாற்கிடங்குகளில் ஒன்றை விட்டுவிடுகிற அல்லது புதிதா யொன்றைப் பாவிப்புக் கெடுக்கும்போது அவை எழுதிப் பதிப்பித்துக கொள்ளவேண்டும். B. அன்றியும், மேற்குறித்தபடி எழுதிப் பதியப்பண்ணிக்கொண்டவுடன் அப்படிப் பதித்துக்கொண்ட எல்லாப் பாற்கூடங்களிலும் பாற்கிடங்குகளிலுமுள்ள வெளியரங்கமான வோரிடத்திலே "எழுதிப் பதியப்பட்ட பாற் கூடக்காரன்" அல்லது "எழுதிப் பதியப்பட்ட பால்விற்போன்" என்று வாசிக்கக்கூடிய எழுத்தால் வரையப்பட்ட வோர் எழுத்து தன் பாற்கூடங்களில் அல்லது பாற்கிடங்குகள் எல்லாவற்றிலும் வைத்து அதைத் தன் கூடங்களை நடத்திவரும் காலமெல்லா மப்படியே இருக்கவிட வேண்டுவதுமன்றியே. தான் பால்விற்பனைக்காகப் பாவிக்கிற ஏதும் வண்டியல்லது வாகனமிருக்கில் அவையெல்லாவற்றிலும் மேற்படி எழுதப்பட்ட எழுத்து வைத்துக்கெள்ள வேண்டும்.

சொக்கியத்துக்கேற்காத பாற்கூட முதலியவை எழுதிப் பதிவுசெய்யப்பட மாட்டா.

8. யாதாயினு மோர் பாற்கூடக்காரனுடைய அல்லது பால்விற்போனுடைய கூடம் அல்லது கிடங்கு அசவுக்கியத்தை வருவிக்கும் விதமாக இருக்கில், அல்லது அவைகளிலிருக்கவேண்டிய வெளிச்சம், காற்று, கான், ஸ்நான இஸ்தலம், மலங்கழி கூடம், நீர்வளம் முதலியவை சுகத்தைக் காப்பாற்றவாவது, அல்லது அவ்விடங்களில் பாவிக்கப்படும் எத்தனங்களைச் சுத்தம்பண்ணத்தகாததாய் அல்லது அவ்விடங்களில் எடுக்கும் பாலை தொற்றுவியாதியிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு யோக்கியமற்றவையிருக்கில், அப்பேர்ப்பட்டவரின் பெயர் ஏஜன்றுதுரை பதிவுசெய்யப்படமாட்டா அல்லது ஏற்கனவே பதியப்பட்டிருந்தால் அவை கிறுக்கவும்படும்.

எழுதிப்பதிவுசெய்துகொள்ளாதவருக்குப் பால்விற்பனை விலக்கலாகும்.

9. தன் குடியிருப்பும், தன் பெயரும், பால் கறப்பதற்கும், பால் வைத்துக்கொள்வதற்கும், அல்லது பகிர்ந்து கொடுப்பதற்கும் தான் பாவிக்கிற பாற்கூடம் பால்கிடங்குகளாகிய இவையின் பேரும் எழுதிப் பதித்துககொள்ளாத எவனுவது சபைஎல்லைக்குள் குடியிருக்கிற எவனுக் கல்லது எவருக்காவது பால் விற்பது நீதிக்கு விரோதமாயிருக்கும்.

பாற்கூடங்கள் முதலியவையில் தோற்றும் தொத்துவியாதிகளை இறப்போர்த்துப்பண்ண வேண்டும்.

10. மனிதர் அல்லது மிருகங்களுள் தோற்றும் யாதாயினுமோர் வியாதியைப் பாற்கூடங்களில் அல்லது பாற்கிடங்களில் கண்ட மாத்திரத்தில் அதை அவ்விடங்களில் வாசம்பண்ணுகிறவர்களால், அல்ல தந்த வியாதிக்குப் பரிகாரம் செய்யும் வைத்தியரால் சபைக்கதை அறிக்கையிடவேண்டும். பாற்கூடக்காரர் தங்களிடம் பால்வாங்குபவரின் பெயர்வளி கொடுக்கவேண்டும்.

11. யாதாயினுமோர் வைத்தியர் தன் எண்ணத்தின்படி தொற்று நசனுண்டானதற்குக் காரணம் எதோ வேர்ப் பாற்கிடங்குக்காரனுடைய அல்லது பால்விற்போனுடைய பாலாற்றுனென்று சபைக்கு அறிக்கையிடச்சம்பவிக்கும் காலத்தும், அல்லது அதுசெய்தி ஏஜன்றுதுரையவர்களுக்கு விளங்கவரும் மற்றும் சமயங்களிலும் அப்பேர்ப்பட்ட பாலை எடுத்தலையும், பகிர்ந்துகொடுத்தலையும் அல்லது விற்றலையும் தடுக்கக் கட்டளையிட மேற்படி துரையவர்களுக்குக் கூடுவதுந்தவிர, அவர்களிடம் பால் கிரயத்துக்கு அல்லது கடனுக்கு வாங்குகிற சகலருடைய நாமங்களும் குடியிருப்பும் வரைந்தவோர் பேர்வழி இடாப் பொன்றை அதிகாரத்துடன் அவர் கேட்பாராயின், மேற்படியானவர்களதைக் கொடுக்க வேண்டுவதுந்தவிர, மேற்படி துரையவர்களுக்கு மேற்படியானவரின் வாசஸ்தலங்களைத் தேடிக்கொள்ளவேண்டியிருக்கில், ஆனதைப்பற்றிய வெல்லாவுதவியும் அவர்களேசெய்யவேண்டும். சொல்லப்பட்ட அறிவித்தலின் ஏவல்படி நடக்காத எந்தப் பால்கூடக்காறர் பால்விற்பனைகாறர்களாகியவர்கள் 1898 ம் லோக்கள் போட்சட்டத்தின் 107 ம் பிரிவின் பிரகாரம் ஓர் குற்றம் செய்வார்கள் என்பது.

தொற்றுவியாதியுள்ளவர்களும், புதிதாய் அவ்வியாதி பிடித்திருந்தவரும், பாற்கூடங்களைச்சேர்ந்த
கிருத்தியங்களில் ஏற்படக்கூடாது.

12. பாற்தொழிலில் ஏற்பட்டிருக்கிற ஆடு மாடு மேய்க்கிற பாற்கூடங்கள் வைத்திருக்கிற அல்லது பால்பராமரிக்கிறவனுவது, அல்லது யாதாயினு மோர் பாற்கூடத்தில் அல்லது பால்கிடங்கிற் குடியிருக்கும் எவனுவது, தான் அறிய யாதாயினு மோர் தொற்றுவியாதியுள்ளவனையாவது, அல்லது அப்பேர்ப்பட்ட வியாதிபிடித்தவருடன் சிறிதுகாலத்துக்கு முன் சஞ்சாரம்பண்ணினவனையாவது ஏஜன்றுதுரை பாலுக்கு தொற்றுநோய் பிடிக்குமென்று அனுமானிக்கிற சகல இடையூறுன சிந்தனையும் நீக்கிப்போடக்கூடிய காலம்மட்டும், பால்கறக்கும்படிக்காக, அல்லது பாலடங்கிய ஏத்தனங்களைத் தொடவாவது அல்லது பாற்தொழிலில் அல்லது ஆடுமாடு மேத்தலின் பால் கறப்பு அல்லது பால்பராமரிப்பிற் அல்லது வைத்திருப்பு பகிர்ந்துகொடுப்பதாகிய கிருத்தியங்களில் மேற்குறித்தவரை வைத்துக்கொள்ளவாவது அவர்களுக்கு இடம் கொடுக்கவாவது கூடாது.

கெட்ட பால்விற்பனவு தடுக்கப்படும்.

13. சபை எல்கைக்குள்படக் குடியிருக்கிற எவனுக்கல்லது எவருக்காவது பால்விற்கிற எவனுவது படுக்கவும் நடமாடவும் பாவிக்கிற யாதாயினு மோர் காமராவில் அல்லது தன்பாலை உதவாததாக்கப் பழுதாக்க அல்லது அசவுக்கியத்துக்கேதுவாக்கக்கூடிய வோர் இடத்தில் சேர்க்கிறதும் வைத்துவைக்கிறதும் அல்லது ஏதுமோர் வியாதி பிடித்திருக்கிற வோர் மிருகத்தின் பாலை அல்லது யாதாயினுமோர் தொற்றுவியாதி பிடித்த வொருவன் வசித்த அல்லது அப்பேர்பட்ட வியாதிபிடிக்கக்கூடிய எப்பேர்ப்பட்டவிடத்திலும் வைக்கப்பட்டிருந்த பாலையாவது அல்லது 11 ம் பிரிவின் தொத்து வியாதியின் நிமித்தம் பால்விற்பனவு தடங்கள்பண்ணப்பட்ட வோர் பாற்கூடத்தின் அல்லது பாற்கிடங்கின் பாலையாவது விற்கிறதும் கூடாது.

---

# LAND SALES.

காணி விற்பனவுகள்.

**No. 786, N. P.**—1915 ம் ஆண்டு ஆவணிமாதம் 10 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, பகல் 12 மணிக்கு தன் ஆபிசில், வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 9 காணித்துண்டுகள், வடமாகாணத்து வலிகாமம் கிழக்கிலும் மறுபகுதிகளிலு மிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,290. குறிச்சி—சிறுப்பிட்டி. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2079 | சோனெல்லுக்கலட்டி | சுப்பர் சபாபதி | கல் நிலம் | 4 0 18 | 20 |

பிளான் இலக்கம் 4,317. குறிச்சி—அச்சுவேலி. உருத்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2134 | வண்ணன் குளக்காடு | அரசாட்சி | காடு | 0 2 33 | 200 |
| 2135 | வண்ணன் குளம் | ஷை | குளம் | 0 1 18 | — |
| 2136 | சின்னுபிட்டி | ஷை | எம். சரவணமுத்துவினுல் கூட்டிச் சேர்க்கப்பட்ட நிலம் | 0 0 14 | 400 |
| 2137 | ஷை | ஷை | எஸ். சபாபதியால் கூட்டிச் சேர்க்கப்பட்ட நிலம் | 0 0 11 | 400 |

பணங்கட்டத் தவறிய காணிகள்.

பிளான் இலக்கம் 4,276. குறிச்சி—நெடுந்தீவுநடுக்குறிச்சி. உரித்தாளி—அரசாட்சி.

காசுகட்டத் தவறியவரின் பெயர்—தொம்மை அந்தோனி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2012 | அடிபட்டு தரை | தொம்மை அந்தோனி | தரவை நிலம் | 1 2 9 | 15 |
| 2013 | ஷை | ஷை | ஷை | 2 1 18 | 15 |
| 2014 | ஷை | ஷை | ஷை | 2 3 4 | 15 |
| 2016 | களியில் பிட்டி | ஷை | ஷை | 2 3 20 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்களை வட மாகாணம் கவுண்மேந்து ஏசன்றுத்துரை யிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை யிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பு, 1915 ம் ஆு ஜூன்மீ 24 ந் உ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Kollupitiya, Colombo Municipality.]

1911 ம் ஆண்டு 10 ம் கட்டளைசட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டு 3 ம் கட்டளைச் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளுக்குக் கீழ் அதிகாரம் செலுத்தும் தேசாதிபதி அவர்களால் தகுந்த வண்ணமாக கற்பிக்கப்பட்டிருப்பதின் நிமித்தம் மேற்கு மாகாணத்திற்குச்சேர்ந்த கொழும்பு நகரசங்க எல்லைக்குள் அடங்கிய கொள்ளுப்பிட்டியிலிருக்கும் 1, 2, 3 லொட்கள் என்னும் 15,980 ம் பிரதமபடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற இதன் கீழ் காண்கிற நிலங்களை எடுக்கும்படி கட்டளைபெறுவதற்கு கற்பிக்கப்பட்டு இருப்பது நிமித்தமும் கொள்ளுப்பிட்டி வளியில் இன்னுமொரு வளி திறப்பதற்காக அரசாட்சியார் அவர்களுக்கு அது தேள்வையாயிருக்கிறது :—

| லொட். | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | 1, 2, 2A நொம்பர்களின் பேரால் வரி கொடுக்கும் காணி .. | ஓடு போட்ட கட்டிடங்கள், 18 சின்ன வீடுகளும், சாந்தால் கட்டப்பட்ட கக்கூசின் ஒரு பகுதியும், 40 வருஷ 8 தென்னை மரங்களும், 20 வருஷ 1 தென்னை மரமும் .. | ஆர்தர் டயஸ் .. | 0 1 25·46 |
| 2 | 3 ம் நொம்பரின்பேரால் வரி கொடுக்கும் காணி | 8 சின்ன வீடுகளுள்ள ஒரு ஓடு போட்ட கட்டிடம், ஒரு சாந்தால் கட்டப்பட்ட கக்கூசும், 40 வருஷ 34 தென்னைமரங்களும் .. | எஸ். ஜோன் சுவாறிஸ் உடைய உரிமைகாரர், தத்துவகாறன் ஜீ. டீ. டீ. த சில்வா .. | 0 2 1·12 |
| 3 | 5 ம் நொம்பரின்பேரால் வரி கொடுக்கும் காணி | 5 சின்ன வீட்டின் பகுதிகளை சேர்ந்த 2 ஓடு போட்ட கட்டிடங்களின் பகுதியும், 40 வருஷ 3 தென்னை மரங்களும் .. .. | வீ. ஆறு. கோமஸ், வீ. யுஸ்தினு கோமஸ்சும் அஸ். மர்கிதா சுவாரிசும் .. .. | 0 0 7·56 |
| | | | | 0 3 34·14 |

7 ம் பிரிவினால் தேள்வையாயிக்கிற பிரகாரம் மேற்சொல்லிய நிலங்களை சொந்தமாக எடுக்க அரசாட்சியார் எண்ணியிருக்கிருர்களென்று நாம் இத்தால் பிரசித்த அறிவித்தல் பண்ணுகிரும். மேற்சொல்லிய நிலங்களுக்கு உரித்தாயிருக்கும் சகல பேர்களும் தாங்களாக அல்லது தங்கள் தத்துவகாரரால் 1915 ம் ஆண்டு ஆடியாதம் 28 ந் திகதி, புதன்கிழமை, மத்தியானம் 1 மணிக்கு கொளும்பு நகரசங்கத்தின் கந்தோரில் என் முகதாவில் வந்து நிற்கும்படியும் அந்த நிலத்தில் தங்களுக்கு இருக்கும் உரித்துகளின் விவரத்தையும், தாங்கள் உரித்துபாராட்டுகிறது எந்தெந்த காரணத்தினிமித்தமும் எத்தொகைக்கென்றும் அரசாட்சியாரால் அவ்வுரித்திவிநிமித்தம் தங்களுக்கு வரவேண்டியது எவ்வளவு என்றும் அறிவிக்கவேண்டுமென்று இத்தால் கட்டளைபண்ணப்படுகிறது.

நகரசங்கசபா கந்தோர்,
கொளும்பு, 1915 ம் ஆண்டு ஆனிமீ 22 ந் உ.

ஆர். டவ்லிவ். பேறட்,
நகரசங்க சபாநாயகரும் கொளும்பு மேயரும்.

---

[Medaviyangoda and Yatiyana, Matara District.]

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பிக் கந்தோர் ஒன்று சரிபண்ண என்னும் ப்கிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 10,197. குறிச்சி—மெதவியங்கொடயும் யடியனயும்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 28 | கெஹெல்கொறடுவ அல்லது ஹூஸிருலவவ்கொறடுவ .. | 1, டீ. ஏ. வீறசிங்க; 2, சீ. தினஸ்ஹாமி .. .. | 0 1 39·62 |
| 30 | குறுன்னுன்சேலாகேகொறடுவ .. | 1, டீ. அன். ஏ. வீறசிங்கட உருத்தாளிகள்; 2, ஏ. ஏ. வீறசிங்க; 3, சே. பீ. அற்நோலிஸ்அப்பு .. .. | 0 2 13·50 |
| 31 | போகஹகொறடுவ .. | 1, சே. வீறசிங்க; 2, பீ. கே. ஸிஸிலியாஹாமி .. | 0 2 13·37 |
| 32 | கொடிப்பிலிகேவத்த அல்லது வெதவலவ்வேவத்த அல்லது அம்பகஹவத்த .. | 1, சீ. வீறசிங்ஹ; 2, டீ. டீ. டப்லிவ். செனறத் .. | 1 1 15·50 |
| 34 | அம்பறல்லகஹகொறடுவீ .. | 1, மேறி சயசிங்க; 2, சே. றத்நாயக; 3, மொறடுவ ஹென்றி சில்வா .. .. .. | 0 1 22·37 |
| 35 | அலுத்வலவ்வேவத்த .. | சீ. வீறசிங்க .. .. .. | 2 0 39·25 |
| 36 | கஙன்கேவத்த .. | அன். ஏ. வீறசிங்கட உருத்தாளிகள் .. | 0 0 28·87 |
| 37 | மஹவத்த .. .. | 1, ஏ. ஏ. வீறசிங்க; 2, ஆர். அல். சீ. தொன் தாவித் .. | 0 3 20 |
| 38 | மஹவத்தேபிடகொறடுவ .. | டீ. டீ. டப்லிவ். செனறத் .. .. | 0 2 3·25 |
| 39 | அந்தோனியாவத்தேபிடகொறடுவ .. | 1, அன். ஏ. வீறசிங்கட உருத்தாளிகள்; 2, சீ. அல். அம். இபருகீம் .. .. .. | 1 0 22·87 |
| 40 | ஷை .. | ஏ. ஏ. வீறசிங்க .. .. .. | 0 0 12·50 |
| 59 | காறிந்த .. .. | டீ. ஏ. வீறசிங்க .. .. .. | 0 0 13·37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஹு சூலைமாதம் 22 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1915 ம் ஹு ஆனிமீ 21 ந் உ.

ஜீ. எவ். ஆர். பிறவுனிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

[Medaviyangoda and Yatiyana, Matara District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பிக்கந்தோர் ஒன்று சரிபண்ண என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 10,197. குறிச்சி—மெதவியங்கொடையும் யடியனயும். விவரம்—தோட்டம்.

| துண்டு. | காணியின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | தொளமுள்ளகேவத்த | 1, அன். டீ. அம். சுவானிஸ்சில்வா ; 2, டீ. அஸ். அன். றத்நாயக | 0 | 2 | 21·93 |
| 2 | அமறகோன்வத்த | 1, ஈ. ஏ. வீறசிங்க ; 2, அஸ். சீ. ஏ. டப்லிவ். பெறேறு ; 3, அஸ். அம். ஏ. டப்லிவ். சயவற்தன | 1 | 0 | 29 |
| 5 | விலத்தறகேவத்த அல்லது கடுகேகொறட்டுவ | ஈ. ஏ. கே. பீ. திலகவற்தன | 0 | 2 | 28·25 |
| 6 | ஷை | ஷை | 0 | 0 | 12·12 |
| 7 | ஹக்மனறுலகே கொறடுவ அல்லது உயங்கொடை லமயாகேவத்த | 1, ஈ. ஏ. கே. திலகவற்தன ; 2, எச். சீ. டீ. சுவானிஸ் ; 3, சிசிலியா ஸமறசிங்க | 1 | 1 | 11·25 |
| 8 | ஷை | ஷை | 0 | 0 | 8·25 |
| | | விவரம்—இல்லை. | | | |
| 9 | இஞ்சிநேற் வங்கலா பாதை | — | 0 | 0 | 9·37 |
| 12 | வடுகேவத்த | 1, அப். எச். டீ. தொன் தினஸ் ; 2, சே. டப்லிவ். அஸ். அபேகுணவற்தன ஓவேஸியர் | 0 | 1 | 15·06 |
| 13 | ஷை | ஷை | 1 | 0 | 3·87 |
| 14 | மங்டவேலந்தவத்த | இஞ்சிநேர் தெப்பார்மெந்து | 0 | 3 | 3·25 |
| 20 | மிஞ்சம்மலாய்வத்த | டீ. ஏ. வீரசிங்க | 0 | 3 | 13·75 |
| 23 | லந்தேவத்த | 1, சுவானிஸ் விறசிங்கட உருத்தாளிகள் ; 2, அஸ். டப்லிவ். குணறத்ன ; 3, அல். டபிலிவ். திசாநாயக ; 4, டீ. சே. திசாநாயக ; 5, டீ. என். டிஸாநாயக | 1 | 0 | 35·75 |
| 29 | சூல்கஹகொறடுவ | 1, கே. சீ. ஹீன்ஹாமி ; 2, எச். சீ. புஞ்சிகாமி | 0 | 0 | 31·31 |
| 33 | தங்கேலாய்கொறடுவ | அஸ். டப்ளிவ். டி. மாபறன | 0 | 1 | 31·75 |
| 41 | அந்தோனியாவத்த அல்லது ஆறச்சிகெதறவத்த | 1, அஸ். டப்லிவ். டி. மாபறன ; 2, டீ. டீ. டப்லிவ். செனறத் | 1 | 0 | 12·12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ௵ ஜூலை ௴ 20 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1915 ம் ௵ ஜூன் ௴ 21 ந் உ.

ஜே. எவ். ஆர். பிறவ்னிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Medaviyangoda and Yatiyana, Matara District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பிகந்தோர் சரிபண்ண என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 10,197. குறிச்சி—மெதவியங்கொடயும் யடியனயும்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 15 | கடுவளகேவத்த | 1, அன். ஏ. விறசிங்கட உரித்தாளிகள் ; 2, டீ. டீ. டப்ளிவ். செனறத் ; 3, மொறடுவ லுவிஸ் த சில்வா | 0 | 3 | 25·25 |
| 16 | கபடாவீசேவத்த | 1, அன். ஏ. வீறசிங்கட உரித்தாளிகள் ; 2, ஆர். சிசிலஹாமி ; 3, பீ. அஸ். குனசேகர | 0 | 2 | 3·61 |
| 17 | வடுகேவத்தே பெலிகஸ்கொறடுவ | 1, சே. டப்ளிவ். டீ. அஸ். அபேகுனவர்தன ; 2, சே. அம். வீறசூறிய | 0 | 2 | 18·50 |
| 18 | உஸ்வத்தேவலவ்வேவத்த | 1, சீ. ஏ. வீறசிங்க ; 2, டீ. டீ. றுமசந்தற ; 3, அச். சீ. ஏ. பெறேறு ; 4, அச். அம். ஏ. டப்ளிவ். சயவர்தன | 1 | 0 | 23·50 |
| 19 | உஸ்வத்த | டீ. ஏ. வீறசிங்க | 0 | 3 | 13·75 |
| 21 | களுகடியேவத்த | சீ. ஏ. வீறசிங்கவத்தை யெடுத்திருக்கும் கோமண்ட் காணி | 0 | 1 | 23·75 |
| 22 | ஷை | 1, சீ. ஏ. வீறசிங்க ; 2, சோர்ச் சில்வா ; 3, மேறி சயசிங்க ; 4, சே. றத்நாயக | 0 | 2 | 1 |
| 24 | கெட்டிதுவக்குவலவ்வேவத்த | 1, டீ. ஏ. வீறசிங்க ; 2, மொறடுவ லுவிச்சில்வா | 1 | 1 | 18·87 |
| 25 | சியம்பலாகஹகொறடுவ | சே. அஸ். வீறசிங்க | 0 | 3 | 24·87 |
| 26 | சம்புகஹவத்த அல்லது இஸ்கோலேவத்த | 1, ஈ. ஏ. வீறசிங்க ; 2, ஏ. ஏ. வீறசிங்க ; 3, மொறடுவ லுவிஸ் த சில்வா ; 4, வெஸ்லியன் மிசனறி | 0 | 2 | 24·75 |
| 27 | சம்புகஹவத்த | அன். ஏ. வீறசிங்கட பூதல் | 0 | 0 | 17·50 |
| 42 | பறனவத்த | பீ. டீ. ஏ. வீறசிங்க | 0 | 2 | 12·62 |

எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ௵ ஜூலை௴ 21 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1915 ௵ ஜூன்௴ 21 ந் உ.

ஜே. எவ். ஆர். பிரவ்னிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு

---

[Medaviyangoda and Yatiyana, Matara District.]

1876 ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பி கந்தோர் சரிபண்ண என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னாச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதம படத்து இலக்கம் 10,197. குறிச்சி—மெதவியங்கொடயும் யடியனவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | கசமன்பிட்டனிய .. | தோட்டம் .. | அன். டி. அம். சொஹானிஸ் த சில்வா .. | 0 3 35·37 |
| 4 | பீறிகேகொறடுவ .. | ஷை .. | ஷை .. .. | 0 2 24·75 |
| 10 | விலத்தற்கேகொறடுவ அல்லது வடுகேவத்த .. | ஷை .. | டீ. சே. அபேகுனசேகற .. .. | 0 0 7·12 |
| 11 | ஷை .. | ஷை .. | — .. .. | 0 0 4·25 |
| 43 | சிங்கன்குற்றிகேவத்த .. | ஷை .. | 1, அன். எச். தொன் சவானிஸ்ட உரித்தாளிகள்; 2, எச். சீ. பபுன்ஹாமி; 3, டீ. பீ. நிகொலஸ்; 4, எச். சீ. ஏ. றனவீற; 5, ஏ. எச் தோனு சிசிலியானு .. .. | 0 0 36 |
| 44 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 2 7·25 |
| 45 | சியம்பலாகஹமுலனேஒவிட | ஷை .. | நிமல்யாவத்தே பன்சல பாறகாறய்யா; 2, டீ. பீ. நிகுலஸ் .. .. .. | 0 0 5·75 |
| 46 | ஞெடியாகெரடவத்த அல்லது அம்பகஹவத்த .. | ஷை .. | 1, சே. தொவன்ஹாமி; 2, எச். பீ. நோனுஹாமி | 0 1 14·62 |
| 47 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 33·87 |
| 48 | ஷை .. | ஷை .. | சாலத்கே பேபிஹாமி .. .. | 0 0 15 |
| 49 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 6·87 |
| 50 | ஷை .. | ஷை .. | டீ. பீ. நிகுலஸ் .. .. | 0 0 20·37 |
| 51 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 11·12 |
| 52 | ஷை .. | ஷை .. | டீ. பீ. திஸன் .. .. | 0 0 5·50 |
| 53 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 10·37 |
| 54 | கோங்கஹவத்த .. | ஷை .. | 1, டப்ளிவ். கலுஅப்பு; 2, டீ. பீ. தஸ்ன; 3, பீ. சிங்கோஅப்பு; 4, பீ. உங்கோஹாமி; 5, பீ. கிறிகாமி .. .. | 0 1 4·75 |
| 55 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 6·37 |
| 56 | பாலுவத்த .. | ஷை .. | டப்ளிவ். கே. டிங்கிஹாமி .. .. | 0 1 23·37 |
| 57 | மெஸ்திரிகேவத்த .. | ஷை .. | 1, கே. ஏ. தொன் அந்திரிஸ்; 2, டப்ளிவ். கலு அப்பு .. .. .. | 0 3 16·12 |
| 58 | பாதை .. | ஷை .. | — .. .. | 0 0 2·06 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ௵ ஜூலைமாசம் 19 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1915 ௵ ஜூன்௴ 21 ந் உ.

ஜே. எவ். ஆர். பிரவ்னிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Mottappuliya, Kegalla District.]

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு மாட்டுக்காலையும் சந்தையுங் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதம படத்து இலக்கம் 110. குறிச்சி—மொட்டைப்புளிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1b | கஸ்கடுறுக்காமுலவத்தை .. | சேனை .. | கண்டி கத்தறகம தேவாலை முதலாளிகள் .. | 0 1 31 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ௵ ஆடிமாசம் 27 ந் தேதியிலன்று பின்பகல் 1 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1915 ௵ ஆனி௴ 17 ந் உ.

எச். ஏ. பேர்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

8513

[Tenders for provisioning Dimbulla and Maha-oya Hospitals.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு 1915 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் 1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிகளுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1915 ம் ௵ ஆடிமீ 13 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்கஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்பட மாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. பிரதான சிவில் மெடிக்க லாபிசரிடமிருந்து முன்னரே எழுத்தில் உத்தரவுபெற்றாலன்றி, ஒப்பந்தங்களை இன்னுமொருவருக்குக் கொடுத்தளிக்க, சாட்டுதல்பண்ண, அல்லது கீழ்க் கொந்திருத்தாகக் கொடுக்கப்படாது.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

11. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அலலது முழுமையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை அல்லது முழுமையையும், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக்குண்டு.

12. இன்னுந் தேவையான விபரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) டபிள்யு. சீ. எச். ரிறிப்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபீசருக்காக.

கொழும்பு, 1915 ம் ஆண்டு ஆனிமீ 19 ந் உ.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை ரூ. | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|
| டிம்புலை | பாலில்லாமல் சமைத்த சாப்பாடு | 200 | 400 |
| மகாஓயா | பால்சேர்த்து சமைத்த சாப்பாடு | 50 | 100 |

[Tende"s for provisioning Hospitals, Tissamaharama, Jaffna, &c.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு 1915 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் 1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ந்திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1915 ம் வருஷம் ஆடிமாதம் 20 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல்வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்

சுாய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்பட மாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. பிரதான சிவில் மெடிக்கலாபிசரிடமிருந்து முன்னரே எழுத்தில் உத்தரவு பெற்றாலன்றி ஒப்பந்தங்களை இன்னுமொருவருக்கு கொடுத்தளிக்க, சாட்டுதல்பண்ண, அல்லது கீழ்க் கொந்திருத்தாகக் கொடுக்கப்படாது.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

11. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை அல்லது முழுமையையும், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக்குண்டு.

12. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) டபிள்யூ. சீ. ஏச். ரிறிப்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1915 ம் ஆண்டு ஆனிமீ 22 ந் உ.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | சாப்பாட்டுச் சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை ரூ. | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|
| திசமாறு | பால்சேர்த்து சமைத்த சாப்பாடு | 100 | 200 |
| யாழ்ப்பாணம் ம்பகலு | ஷை | 200 | 400 |
| கெலபொக்கை | ஷை | 200 | 400 |
| மஸ்கேலியா | ஷை | 200 | 400 |
| புத்தளம் | ஷை | 200 | 400 |
| நாவலப்பிட்டி | ஷை | 300 | 600 |
| ரெத்தினபுரி | ஷை | 300 | 600 |

---

[Tenders for the purchase of Ferry Toll Rents, Pannaiturai, Aralturai, &c., Jaffna District.]

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னும் சொல்லப்படுந் துறை ஆயக்குத்தகைகளை 1915 ம் ஹூ அக்டோபர் மாசம் 1 ந் திகதி தொடக்கமாகப் பன்னிரண்டு மாதத்துக்கு விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1915 ம் ஆண்டு யூலாய் (ஆடி) மாதம் 17 ந் திகதி, சனிக்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்:—

1. பண்ணைத்துறை. | 3. காரைதீவு.
2. அராலித்துறை. | 4. மன்னார்.

மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும்.

பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபட வேண்டும். தபால் வழியாய் அனுப்பப்படுபவையுங் குறித்த நேரம் தேதியின்பின் கிடைப்பவையுங் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படுங் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 30 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப்பிணையேனும் காசாய்க் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

முடிக்குரிய தரணி பிணையாய்க் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவும் ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாய்க் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் அல்லது மன்னார் உதவி ஏசண்டரிடம் தேவையானால் மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சீ. ஜே. எஸ். பிரிட்சட்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1915 ம் ஹூ ஜூன் (ஆனி)மீ 16 ந் உ.